பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**01 01 2026 THURSDAY 6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** நாட்டின் முதலாவது படுக்கை வசதியுடன் கூடிய வந்தே பாரத் ரயில், குவஹாத்தி — கொல்கத்தா இடையே இயக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

**2)** சரக்கு மற்றும் சேவை வரி, கடந்த டிசம்பர் மாதத்தில், ஒரு லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய் வசூலாகியிருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

**3)** தமிழகத்தில், பொங்கல் பரிசுத் தொகுப்புடன் பணமும் கொடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன், மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

**4)** கன்னியாகுமரி, கோவை உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** குஜராத் மாநிலத்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Jensi — Anjel** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>- இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<<>>>>>

நாட்டின் முதலாவது படுக்கை வசதியுடன் கூடிய வந்தே பாரத் ரயில் குவஹாத்தி — கொல்கத்தா இடையே இயக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இன்னும் 20 நாட்களுக்குள் பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த சேவையை தொடங்கிவைக்க இருப்பதாக கூறினார்.

வந்தே பாரத் படுக்கை வசதி ரயிலுக்கான அதிவேக சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய அவர், இந்த ரயில் முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு இருப்பதாக தெரிவித்தார்.

16 பெட்டிகளை கொண்ட இந்த ரயில், ஆயிரத்து 500 கிலோமீட்டர் தொலைவு வரை பயணம் செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதில் குளிர்சாதன மூன்றாம் வகுப்பு பயணக் கட்டணமாக 2 ஆயிரத்து 300 ரூபாயும், குளிர்சாதன இரண்டாம் வகுப்புக்கு 3 ஆயிரம் ரூபாயும், குளிர்சாதன முதல் வகுப்புக்கு 3 ஆயிரத்து 600 ரூபாயாக இருக்கும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி கடந்த டிசம்பர் மாதத்தில், ஒரு லட்சத்து **75** ஆயிரம் கோடி ரூபாய் வசூலாகியிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது அதற்கு முந்தைய ஆண்டின் இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில் **6** புள்ளி ஒரு சதவீதம் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மத்திய ஜிஎஸ்டி-யாக **34** ஆயிரத்து **289** கோடி ரூபாயும், மாநில ஜிஎஸ்டி-யாக **41** ஆயிரத்து **368** கோடி ரூபாயும் கிடைத்துள்ளது.

ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி-யாக **98** ஆயிரத்து **894** கோடி ரூபாய் வசூலாகியிருப்பதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

தமிழகத்தில், பொங்கல் பரிசுத் தொகுப்புடன் பணமும் கொடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன், மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

திருநெல்வேலி சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட கங்கை கொண்டான் அருகே நபார்டு வங்கி நிதியுதவியுடன் ஆறு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள பாலத்திற்கு அடிக்கல் நாட்டியபின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பொங்கல் பண்டிகைக்கு பிறகு தமிழகத்தில் கூட்டணி நிலை குறித்த உறுதியான தகவல்கள் அறிவிக்கப்படும் என்று அவர் கூறினார்.

''தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்'' என்ற தமது பிரச்சாரத்தின் நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வரும் நான்காம் தேதி புதுக்கோட்டை வரவிருப்பதாக கூறிய திரு நயினார் நாகேந்திரன், மறுநாள் ஐந்தாம் தேதி திருச்சியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மத்திய அரசின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த சட்டத்தில் தொழிலாளர்களுக்கான வேலை நாட்கள் மற்றும் ஊதியம் அதிகரிக்கப்பட்டிருப்பதற்கு காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — விவசாயி குணசேகரன் — 17 Sec.)***

<<<<<<<>>>>>>

வேலூர் மாவட்டத்தை சேர்ந்த தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பாஸ்போர்ட் சேவைகளை எளிதில் வழங்கும் விதமாக, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாஸ்போர்ட் சேவை வாகனம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் பாஸ்போர்ட் சேவை, தங்களுக்கு மிகவும் பயன் அளிப்பதாக உள்ளது என்று இந்த முகாமில் பங்கேற்ற பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

***(Sound Byte — பயனாளிகள் — 42 Sec.)***

<<<<<<<>>>>>

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கோவை, நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் - 49 Sec. )***

<<<<<<<>>>>>

தில்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான கால்பந்து போட்டியில், **14** வயது மற்றும் **19** வயதுக்கு உட்பட்டோருக்கான

பிரிவில், திருப்பூரை சேர்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்கள் இரண்டாம் இடம் பிடித்துள்ளனர்.

வெற்றிக்கோப்பையுடன் திருப்பூர் திரும்பிய இந்த மாணவர்களுக்கு திருப்பூர் ரயில் நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சபரிஷ் - 42 Sec.)***

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கல்பாக்கம் இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையத்தின் புதிய இயக்குனராக திரு ஸ்ரீகுமார் பிள்ளை இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

-----------------

நெல்லை மாநகர காவல் ஆணையராக திரு மணிவண்ணனும், மேற்குப்பகுதி துணை ஆணையராக திரு மதனும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

------------------

சென்னையை அடுத்த ஆவடியில் உள்ள மத்திய ரிசர்வ் காவல்படை மையத்தில் இன்று மக்கள் மருந்தகம் தொடங்கப்பட்டுள்ளது.

----------------

விடுமுறை தினத்தையொட்டி, கன்னியாகுமரி மற்றும் குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிக அளவில் இருந்தது.

------------------

விவசாயம் செழிக்கவும், மழை வேண்டியும் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரபட்டினம் முத்தாரம்மன் கோவிலில் பக்தர்கள் ஆயிரத்து எட்டு பால்குடம் எடுத்து வழிபட்டனர்.

------------------

புத்தாண்டு தினத்தையொட்டி, பழனி முருகன் கோவில், காஞ்சி காமாட்சி அம்மன் கோவில், மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காடு சுவேதாரண்யேஸ்வரர், காஞ்சிபுரம் மாவட்டம் வல்லக்கோட்டை முருகன் கோவில் உள்ளிட்ட பல்வேறு ஆலயங்களில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

---------------

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள குற்றாலநாதர் கோவிலில் திருவாதிரை திருவிழாவை முன்னிட்டு, நடராஜர் மூர்த்திக்கு பச்சை மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு, தாண்டவ தீபாரதனை நடைபெற்றது.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

குஜராத் மாநிலத்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Jensi — Anjel** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

அகமதாபாதில் இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **6-2, 6-3** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Sonal Patil — Bela Tamhankar** இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Mundhe Parthsarthi** மற்றும் **Vaidehi Chaudhari** காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<END>>>>>>**